பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
07 10 2024 **MONDAY** 7 15 **AM**
வணக்கம், ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா – மாலத்தீவு இடையே பல்வேறு ஒப்பந்தங்கள் புதுதில்லியில் இன்று கையெழுத்தாகவுள்ளன.

2. இடதுசாரி தீவிரவாத குழுக்களால் பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்களின் முதலமைச்சர்களின் நிலையிலான கூட்டம் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையில் இன்று புதுதில்லியில் நடைபெறுகிறது.

3. பாதுகாப்புத் தளவாட ஆய்வு அமைப்பின் **Def Connect-4-**ஐ பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் இன்று தொடங்கி வைக்கிறார்

4. விண்வெளித் துறையில் ஸ்டார்ட் அப் நிறுவனங்களை ஊக்குவிப்பதற்காக ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

5. குவாலியரில் நடைபெற்ற முதலாவது டிவெண்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் பங்களாதேஷை வென்றது.

>>>>><<<<<

ஐந்து நாள் பயணமாக இந்தியா வந்துள்ள மாலத்தீவு அதிபர் டாக்டர் **Mohammed Muizzu,** பிரதமர் திரு. நரேந்திர மோடியை புதுதில்லியில் இன்று சந்தித்து இருதரப்பு உறவுகள் மற்றும் சர்வதேச பிரச்சினைகள் குறித்து விவாதிக்கிறார்.

அப்போது இரு நாடுகளுக்கு இடையிலான பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகவுள்ளன.

இந்த பேச்சுவார்த்தைக்கு முன்பாக, குடியரசுத்தலைவர் மாளிகையில் மாலத்தீவு அதிபருக்கு பாரம்பரிய வரவேற்பு அளிக்கப்படுகிறது.

பின்னர், மகாத்மா காந்தியின் நினைவிடத்திற்குச் செல்லும் அவர் மலரஞ்சலி செலுத்துகிறார்.

பின்னர், குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் ஆகியோரையும் சந்தித்து உரையாடுகிறார்.

புதுதில்லியில் தமது நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு, அவர் ஆக்ரா, மும்பை நகரங்களுக்கு நாளை செல்கிறார். புதன்கிழமையன்று பெங்களூருவில் நடைபெறும் நிகழ்ச்சி ஒன்றிலும் அவர் கலந்து கொள்கிறார்.

>>>>><<<<<

இடதுசாரி தீவிரவாத குழுக்களால் பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்களின் நிலைமை குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையில் இன்று புதுதில்லியில் கூட்டம் நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் ஆந்திரா, தெலங்கானா, ஒடிசா, பீகார், சத்திஷ்கர், ஜார்க்கண்ட், மஹாராஷ்ட்ரா மற்றும் மத்தியப்பிரதேச மாநிலங்களின் முதலமைச்சர்கள் கலந்து கொள்கின்றனர்.

மேலும், மத்திய அமைச்சர்கள் 5 பேரும், தேசிய பாதுகாப்பு துணை ஆலோசகர் மற்றும் மத்திய மாநில அரசுகளின் உயரதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கின்றனர்.

இதுதொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் இடதுசாரி தீவிரவாத குழுக்களின் செயல்பாடுகளை 2026ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முழுமையாக அகற்றும் விதத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுக்கள், அதிகமாக செயல்படும் மாநிலங்களில் கட்டுப்படுத்துவதற்கு தேவையான உதவிகளை மத்திய அரசு செய்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் காரணமாக, 72 சதவீதம் அளவிற்கு தீவிரவாத நடவடிக்கைகள் குறைந்துள்ளதாகவும், 2024ஆம் ஆண்டில் இதுவரை 202 நக்ஸலைட்டுகள் கொல்லப்பட்டுள்ளதாகவும், 723 பேர் தங்களது ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு, சரணடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

சுயசார்பை அடைய உள்நாட்டிலேயே பாதுகாப்புத் தளவாடங்கள் தயாரிப்பு மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் குறித்த, **Def Connect-4-**ஐ புதுதில்லியில் இன்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தொடங்கி வைக்கிறார்.

தில்லி கண்டேன்மென்ட்டில் உள்ள மானக்ஷா மையத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது.

பாதுகாப்பு உற்பத்தி துறையின்கீழ் இயங்கும் பாதுகாப்புத் தளவாட ஆய்வு அமைப்பு, இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது.

இதில் ஆயுதப்படைகள், பாதுகாப்பு பொதுத்துறை நிறுவனங்கள், தொழில்துறை தலைவர்கள், புதிய கண்டுபிடிப்பாளர்கள், ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் மற்றும் சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள், முதலீட்டாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

>>>>><<<<<

விண்வெளித் துறையில் ஸ்டார்ட் அப் நிறுவனங்களை ஊக்குவிப்பதற்காக ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதிலியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடி மூன்றாவது முறையாக பதவியேற்று, 100 நாட்களில் இந்த நிதி ஒதுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது என்று கூறினார்.

கடந்த பத்தாண்டுகளில் விண்வெளித் துறையில் ஒன்றரை லட்சம் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் உருவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

விண்வெளித் துறையில் 100 சதவீத அந்நிய முதலீடு பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதையும் திரு. ஜிதேந்திர சிங் சுட்டிக்காட்டினார்.

>>>>><<<<<

வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சி அதிகரித்துள்ளதாக நாடாளுமன்ற விவகாரங்கள்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில் இதனை தெரிவித்தார்.

மணிப்பூரில் நடைபெற்று வரும் ஒருசில சம்பவங்கள் தவிர, வடகிழக்கு மாநிலங்களில் அமைதி நிலவுவதாகவும் அவர் கூறினார்.

காங்கிரஸ் ஆட்சியின் போது, அம்மாநிலங்களில் வளர்ச்சி ஏற்படவில்லை என்றும், பிரதமர் திரு. நரேந்திர மோடி பதவியேற்ற பின், 10 ஆயிரம் தீவிரவாதிகள் தங்களது ஆயுதங்களை ஒப்படைத்து சரணடைந்துள்ளதாகவும் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

>>>>><<<<<

ஜம்மு காஷ்மீர், ஹரியானா மாநிலங்களின் சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குகள் நாளை எண்ணப்படுகின்றன.

இதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றன.

ஜம்மு காஷ்மீரில் 90 தொகுதிகளுக்கு மூன்று கட்டங்களாக அமைதியான முறையில் தேர்தல் நடைபெற்றன.

அதேபோல, ஹரியான மாநிலத்திலும் 90 தொகுதிகளுக்கான தேர்தல் நடைபெற்றன.

இந்த தேர்தல்களில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி 90 மையங்களில் நடைபெறவுள்ளதாக அம்மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. பங்கஜ் அகர்வால் தெரிவித்துள்ளார்.

மேலும், வாக்கு எண்ணும் மையங்களில் கண்காணிப்பு கேமராக்கள் நிறுவப்பட்டுள்ளதாகவும், மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாகவும், மாநிலம் முழுவதும் காவல்துறையினர் மற்றும் பாதுகாப்புப் படையினர் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

>>>>><<<<<

இந்திய ரிசர்வ் வங்கியின் நிதிக்கொள்கை குழுவின் 3 நாள் கூட்டம்

இன்று மும்பையில் தொடங்குகிறது.

இந்தக் கூட்டத்தில், பொருளாதார வளர்ச்சி, உணவுப் பொருட்களின் விலை உயர்வு, வட்டி விகிதம் ஆகியவை குறித்து விவாதிக்கப்படுகிறது.

நுகர்வோர் விலை குறியீட்டை 4 சதவீதம் முதல் 2 சதவீத அளவிற்குள் கொண்டு வருமாறு மத்திய அரசு ரிசர்வ் வங்கியை கேட்டுக் கொண்டுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சக்திகாந்ததாஸ் தலைமை வகிக்கிறார்.

மூன்று நாள் கூட்டத்தின் முடிவுகளை வரும் புதன்கிழமையன்று அவர் வெளியிடவுள்ளதாக ரிசர்வ் வங்கியின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டள்ளது.

>>>>><<<<<

தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று, மத்திய அரசு 17 ஆயிரத்து 100 மெட்ரிக் டன் கோதுமையை வழங்க அனுமதி அளித்துள்ளதாக மாநில உணவுத்துறை அமைச்சர் திரு. சக்கரபாணி தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம், வடக்காடு ஊராட்சியில் புதிய கட்டிடங்களை திறந்து வைத்துப் பேசிய அவர், தமிழகத்திற்கு மாதந்தோறும் எட்டாயிரம் மெட்ரிக் டன் கோதுமை வழங்கப்பட்டு வருகிறது என்றும் இதை 25 ஆயிரம் மெட்ரிக் டன் அளவிற்கு உயர்த்தி வழங்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு கோரிக்கை விடப்பட்டது என்றும் கூறினார்.

இதனையடுத்து, இம்மாதம் முதல் 17 ஆயிரத்து 100 மெட்ரிக் டன் கோதுமையை வழங்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் குடும்ப அட்டை கோரி பெறப்படும் விண்ணப்பங்களில், தகுதியான நபர்களுக்கு 15 நாட்களில் குடும்ப அட்டை வழங்கப்பட்டு வருவதாகவும், இதுவரை 17 லட்சம் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

குஜராத் முதலமைச்சராக 2001ஆம் ஆண்டு இதேநாளில் திரு. நரேந்திர மோடி பதவியேற்ற தினத்தை கொண்டாடும் விதத்தில், அம்மாநிலத்தில் **Vikas Saptah** என்ற பெயரில் மூவாயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை மாநில அமைச்சர் திரு. **Rushikesh Patel** அறிவித்துள்ளார்.

நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், குஜராத்தின் பெருமைகளை எடுத்துரைக்கும் விதத்தில் அமைந்துள்ள இடங்களில் ஒரு வாரகாலத்திற்கு பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் ஆட்சியின் மாண்புகள் குறித்து மக்கள் தங்கள் கருத்துக்களை பதிவு செய்யலாம் என்றும் திரு. **Rushikesh Patel** கூறினார்.

**>>>>><<<<<**

கனமழை காரணமாக, மேகாலயாவில் **Garo** மலைப்பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் 10 பேர் உயிரிழந்தனர், பல்வேறு இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

இம்மாநிலத்தின் மேற்கு – தெற்கு மலைப்பகுதிகள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளப்பெருக்கு காரணமாக அங்கு இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்து.

பல இடங்களில் சாலைகள் மற்றும் பாலங்கள் சேதமடைந்துள்ளன.

தொலைத்தொடர்பு வசதியும் முற்றிலுமாக முடங்கியுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை தேசிய பேரிடர் மீட்புப் படையினர் மேற்கொண்டுள்ளனர்.

இதற்கிடையே, அம்மாநில முதலமைச்சர் திரு. **Conrad Sangma** பாதிக்கப்பட்ட பகுதிகளை நேற்று நேரில் பார்வையிட்டார்.

**>>>>><<<<<**

குவாலியரில் நடைபெற்ற முதலாவது டிவெண்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் பங்களாதேஷை வென்றது.

128 ரன் என்ற இலக்கோடு களமிறங்கிய இந்திய அணி, 11 புள்ளி ஐந்து ஓவரில் வெற்றி பெற்றது.

சஞ்சு சாம்சன் மற்றும் சூரியகுமார் யாதவ் ஆகியோர் தலா 29 ரன் எடுத்தனர்.

ஹர்தீப் பாண்டியா 39 ரன் எடுத்தார்.

பங்களாதேஷ் சார்பில் முஸ்தாபிஸூர் ரஹ்மான், மெஹ்தி ஹசன் மிராஸ் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இந்தியாவின் **Arshdeep Singh** சிறந்த ஆட்டக்காரராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இரு அணிகளுக்கு இடையேயான இரண்டாவது டிவெண்டி டிவெண்டி கிரிக்கெட் போட்டி, நாளை மறுநாள் புதுதில்லியில் நடைபெறுகிறது.

**>>>>><<<<<**

ஷாங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுறறில் இத்தாலியின் **Jannik Sinner,** அர்ஜென்டினாவின் **Thomas Martin Etcheverry** –யை 6-7, 6-4, 6-2 என்ற செட்கணக்கில் வெற்றி பெற்றார்.

அடுத்து நடைபெறவுள்ள காலிறுதிக்கு முந்தைய சுற்றில் **Jannik Sinner,** ஸ்பெயினின் **Roberto Carballes Baena-**ஐ அல்லது அமெரிக்காவின் **Ben Shelton-**ஐ எதிர்கொள்கிறார்.

**>>>>><<<<<**